DIOCESE OF KUMBAKONAM

# NEWS LETTER

(Compiled and Edited by Diocesan News Letter Committee)

VOL. : 43 DECEMBER - 2016 No. 12



JOY IS THE GIGANTIC SECRET OF THE CHRISTIAN

- G.K. CHESTER TON

## ஆயரின் இனிய வேண்டுகோள்

1. திருவருகைக்காலத்தின் போதும், தவக்காலத்தின் போதும் இறையடியார் லூர்து சேவியர் சவரிராயன் அடிகளார் அவர்களின் கல்லறைக்கு இறைமக்கள் திருப்பயணம் செல்ல அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்க அனைத்து அருள்தந்தையர்களும் முயற்சிகள் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.
2. 11.12.2016 அன்று Dalit Liberation Sunday (தலித் கிறிஸ்தவர் விடுதலை ஞாயிறு) எல்லாப் பங்குகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட ஏற்பாடுகள் செய்யவும்.
3. ஒவ்வொரு திருப்பலியின் பொழுதும் மறையுரை ஆற்றுவது நல்லது. மறையுரைக்குப் பின் ஆமென் என்று சொல்வதைத் தவிர்க்கவும்.
4. திருப்பலிக்குரிய முன்னுரை மிகவும் சுருக்கமாக இருப்பது நல்லது. முன்னுரையில் அன்றைய வாசகங்களைப் பற்றிக் குறிப்பிடுவதைத் தவிர்க்கவும்.
5. எல்லாம் வல்ல இறைவனிடமும்... என்று துவங்கும் மன்றாட்டில் **மரியா** என்றும் **இறைவனாகிய ஆண்டவரிடம்** என்றும் சொல்லவும்.
6. நன்றி சொல்லும் நிகழ்ச்சி திருப்பலிக்குப் பிறகே நடைபெற வேண்டும்.
7. Those who are yet to get their Mass Diary signed by me, are asked to do it by January 15, 2017. Fr. Procurator will look into this matter when you approach him for Mass Intentions.

## இறை இரக்க ஆண்டின் நிறைவு விழா

நமது கும்பகோணம் மறைமாவட்டத்தில் 2016 – ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 – ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை இறை இரக்க ஆண்டின் நிறைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவும்.

**குறிப்பு :**

1. அருள்பணியாளர்கள் மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்களின் உதவிகளை நாடலாம்.
2. திருப்பலிக்குப் பிறகு இறை இரக்க ஆண்டின் நினைவாக சில ஏழைகளுக்கு உதவி செய்யலாம்.
3. ஏழு நாள்களை சந்திப்பு வாரமாக அறிவித்து அந்த வாரத்தில் அருள்பணியாளர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினரின் இயக்கங்கள் (பக்த சபைகள்) வீடுகளை, குறிப்பாக ஏழை மக்களின் வீடுகளைச் சந்திக்கலாம்.

# MERCIFUL JESUS

Respected and dear brother-priests, religious and laity,

A young man shouted, O God forgive my sins! God asked him, which sins? The sinner thought that God had a big list of his sins. God continued to speak! Yes my dear son, which sins you want me to forgive? When you felt sorry for your sins I forgave all your sins and I forgot them.

**Our God is a God of infinite mercy.**

Ex 2: 11-15: Moses was a murderer. He killed an Egyptian. But God called him to be the leader of the Israelites. It is through him God worked ten miracles in the land of Pharaoh. Why God chose Moses, a murderer to take the Israelites into the Holy Land?

**There could be hundred and one reasons for God's choice. But one of the main reasons is, God wanted to tell the world that he is a God of mercy not a God of vengeance.**

Jn 8: 1-8: We see a sinful woman being brought by some scribes and pharisees before Jesus.

Jesus says: If there is any one among you who has not sinned, throw the first stone at her.

Nobody dared to throw any stone at her and all left the place. When everyone left the place, what should the woman have done? She should have quit the place. Because in front of her was sitting a sinless Son of God, that is Jesus. He can very well throw the stone at her. The sinner knew very well that Jesus would not throw the stone at her and punish her. Jesus tells her: Go away and don't sin anymore.

**Yes, Jesus is the embodiment of God's mercy.**

**Let us have absolute faith in the merciful God who is born in our midst and never despair of his pardon.**

Let us humble ourselves before Child Jesus and implore his pardon and he would surely rejoice over our repentance as the father in the parable of prodigal son and his brother rejoiced over that of the prodigal son.

**Wishing you a mercy - filled Christmas and New Year 2017,**

Yours affectionately in Our Lord,
✠ F. Antonisamy,
Bishop of Kumbakonam.

## PAPAL INTENTION FOR DECEMBER - 2016



**General Intention**

That the scandal of child-soldiers may be eliminated in the world over.

**Mission Intention**

That the people may rediscover the beauty, goodness and truth of the Gospel which gives joy and hope to life.

## Bishop’s Programme – December, 2016

| | | | |
|---|---|---|---|
| 01 | Thu | | Marriage Mass: Thanjavur |
| | | 06.00 p.m. | Eucharistic Processsion, Sembodai |
| 02 | Fri | 10.00 a.m. | Development Committee Meeting, Elakurichy |
| 03 | Sat | 08.15 a.m. | Feast Mass at Kallakkudi |
| | | 05.00 p.m. | Centenary Meeting : Sacred Heart Hospital, Kmu |
| 04 | Sun | 06.00 a.m. | Holy Mass: Bishop's Appeal: Michaelpatty |
| 05 | Mon | | Visitors' Day (Diocesan and Religious Priests) |
| 06 | Tue | | Visitors' Day (Religious Sisters and Lay People) |
| 07 | Wed | 9.30 a.m. | Meeting the Project Secretary |
| | | 10.00 a.m. | Meeting of the Diocesan Commissions' Secretaries |
| 08 | Thu | 06.30 a.m. | Cathedral Consecration Day, Kmu |
| 09 | Fri | | Consecration of the Cathedral, Coimbatore |
| 10 | Sat | 10.00 a.m. | Recollection for the higher education students |
| 11 | Sun | 08.00 a.m. | Holy Mass: Michaelpatty :<br>Dalit Liberation Sunday |
| 12-14 | | | Chennai |
| 16 | Fri | 11.00 a.m. | Meeting the Project Secretary |
| | | 06.00 p.m. | House Visit, Kmu |
| 17 | Sat | 10.00 a.m. | Senate Meeting |
| | | 06.00 p.m. | Charismatic Leadership Meeting : Poondi Madha Retreat Cum Worship Centre |
| 18 | Sun | 09.30 a.m. | Greeting the Bishop: Rev. Sisters |
| | | 06.30 p.m. | Jubilee Year of Mercy : Closing Ceremony, Cathedral |
| 19 | Mon | | Visitors' Day (Diocesan and Religious Priests) |
| | | 06.30 p.m. | Christmas Celebration : Sagayamadha Hospital, Pullambadi |
| 20 | Tue | | Visitors' Day (Religious Sisters and Lay People)<br>Suppose Christmas: Bishop's House, Kmu |
| 21 | Wed | 11.00 a.m. | Meeting the Project Secretary |
| | | 03.00 p.m. | V.I.P. & Press Conference Meet |
| | | 05.00 p.m. | Christmas Rally, Kmu |

| | | | |
|---|---|---|---|
| 24 | Sat | 11.45 p.m. | Christmas Vigil Mass: Cathedral, Kmu |
| 25 | Sun | 07.00 a.m. | Christmas Mass: Carmel Ashram, Kmu |
| 27 | Tue | 05.30 p.m. | Ordination : Kovandakurichy |
| 28 | Wed | 10.00 a.m. | Centenary Celebration: Sacred Heart Hospital, Kmu |
| 29 | Thu | 11.30 a.m. | Family Day Celebration : Cathedral, Kmu |
| | | 04.00 p.m. | Centenary Celebration : Sacred Heart Hospital, Kmu |
| 30 | Fri | 10.00 a.m. | Meeting of the Two of the Curia Members and Two of the Diocesan Commission Secretaries |
| 31 | Sat | 11.45 a.m. | New Year Vigil Mass: Cathedral Kmu |

## WISH YOU A HAPPY BIRTHDAY

| | | |
|---|---|---|
| **05.12.1946** | **Most Rev. F. Antonisamy** | **Kumbakonam** |
| 05.12.1958 | Fr. A. Vincent | Kmu |
| 05.12.1977 | Fr. K. Stephen Michaelraj | Singapore |
| 12.12.1960 | Fr. M. Francis | U.S.A |
| 13.12.1938 | Fr. S. Selvaraj | Sundharaperumal Kovil |
| 13.12.1977 | Fr. Maria Joemicks Savio | Chennai |
| 15.12.1955 | Fr. C. Kulandai | Kaniyiruppu |
| 16.12.1978 | Fr. Benedict Dhiraviyam | Tezpur |
| 17.12.1975 | Fr. V. Sahaya Christuraja | Thirumanthurai |
| 19.12.1980 | Fr. R.S.Don Bosco | Bangalore |
| 20.12.1977 | Fr. I. Arokia Samy | Andimadam |
| 21.12.1965 | Fr. M. Kulandairaj | Poondi |
| 22.12.1982 | Fr. M. Joseph | Thiruvalenthurai |
| 25.12.1968 | Fr. G. Christuraj | I.T.I., Kmu |
| 28.12.1985 | Fr. G. Satheesh Yesudoss | Poondi |
| 29.12.1975 | Fr. Arul Irudayasamy | Germany |
| 29.12.1978 | Fr. A. Julian Antonyraj | Pune |

## ORDINATION

| | | |
|---|---|---|
| 04.12.2000 | Fr. A. Benjamin Joseph Raj | Singapore |
| 20.12.1968 | Fr. A. Savarimuthu | Kmu |
| 20.12.1971 | Fr. A. Antoine | Kokkudi |
| 21.12.1969 | Fr. L. Vincent | Pullambady |
| 22.12.1998 | Fr. A. Jeyaraj | Konnaikudy |
| 22.12.1998 | Fr. Francis M. Sebastian | Coimbatore |
| 22.12.1998 | Fr. A. Arokiasamy | Perumathur |
| 27.12.1980 | Fr. J. John Panneerselvam | Kabisthalam |

## NECROLOGY

| | | |
|---|---|---|
| 05.12.1984 | Rev. Maria Arokiam | Kumbakonam |
| 08.12.1999 | Rev. S. Antonisamy | Ayyampettai |
| 09.12.1938 | Rev. M. Ignacinathar | Kumbakonam |
| 09.12.1977 | Rev. S. Abraham | Kumbakonam |
| 14.12.2009 | Rev. A. Lourdusamy | Kumbakonam |
| 15.12.1980 | Rev. Roch Manickam | Kumbakonam |
| 19.12.1968 | Rev. Augustine David | Vadugarpet |
| 26.12.1984 | Rev. A. Francis Rexis | Kovandakurichy |
| 30.12.1942 | Rev. S. Singarayar | Kumbakonam |

## FROM THE DESK OF THE VICAR GENERAL

### BIRTH DAY WISHES

Your Excellency,

On your Birth Day on 5th December, 2016, we the Clergy, Religious and Faithful of the diocese wish you a very Happy Birth Day and many more returns of the day. We offer you our sincere and prayerful wishes for your continued good health and fulfilling Episcopal ministry.

Vicar General,

Clergy and Faithful.

## FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Father,

Our thanks to Rev. Fr. I. Adaikalasamy, P.P, V.F., Perambalur Parish for having contributed a sum of ₹ 12,111.

Bishop's Annual Appeal :

| | | |
|---|---|---|
| Amount in the Bank Account | ₹ | 2,93,465.00 |
| Perambalur Parish | ₹ | 12,111.00 |
| Total | ₹ | 3,05,576.00 |

Fraternally yours,

Fr. M. Philip Santiagu.

## SENATE MEETING

Senate meeting is going to be held on Saturday, 17$^{th}$ December 2016, at 9.30 a.m. in the Bishop's House, Kumbakonam. Fathers are requested to send the points for the agenda before 10$^{th}$ December 2016.

Fr. Roch Alexander,

Senate Secretary.

# DIOCESAN EDUCATION COMMITTEE

## Transfer / Promotion / Appointment - 26.11.2016

| S.No | Name | Transfer/Promotion /Appointment | In the Place of |
|---|---|---|---|
| 1 | Mrs.Pauline Anbarasi | Promoted as H.M in RCSMAES - Melamichaelpatty | Sudden death of Mr.K.Diviyanathan, H.M |
| 2 | Mrs.Nimalda selvi (Surplus) | Transferred to RCSMAES - Melamichaelpatty | Promotion of Mrs.Pauline Anbarasi |
| 3 | Mrs.Isabella | Promoted as P.G in AAGHSS - Varadharajanpet | Voluntary retirement of Mrs.Kathirarasi |
| 4 | Mr.M.Kulandairaj | Transferred to SMHS - Keelmichaelpatty | Promotion of Mrs.Isabella, P.G |
| 5 | Mr.A.Rubert Jeyaseelan (Surplus) | Promoted as B.T in SPHSS - Kulumur | Transfer of Mr.M.Kulandairaj |
| 6 | Mrs.Mary Shanthi | Promoted as B.T in SIHS - Kulamanickam | Retirement of Mrs. Christianmmal, S.G, Converted Place |
| 7 | Mrs.B.Mercy Poongudi (Surplus) | Transferred to CJPS - Udaiyarpalayam | Transfer of Mr.Lenin |
| 8 | Mrs.M.Celine Marsela Mercia (Surplus) | Transferred to RCMS - Palayam | Transfer of Mr.Francis |
| 9 | Mr.D.Xavier (Surplus) | Transferred to RCAAMS - Fathimapuram, Alaghapuri | Transfer of Sr.Mary Jesintha |
| 10 | Mrs.P.Amala mary | Appointed as Office Assistant in ALGHSS - Thennur | Retirement of Mr.Anthonisamy |
| 11 | Mr.Justin Clement (Surplus) | Promoted as B.T in LFHSS - Kumbakonam | Voluntary retirement of Mr.H.Gnana Muthu |
| 12 | Mr.Sathish Kumar (TET PASS) | Appointed as B.T in LFHSS - Kumbakonam | Sudden death of Mr.Joseph Alexis, S.G, Converted Place |

Yours in Christ Jesus,
Fr. P. Singarayar,
Education Secretary.

# மறைமாவட்ட மேய்ப்புப் பணி மையச் செய்திகள்

## மறைக்கல்வி பணிக்குழு

பள்ளி ஆய்வு

| நாள் | பள்ளி | ஊர் | நேரம் |
|---|---|---|---|
| 08-11-2016 | இருதய ஆண்டவர் து. பள்ளி | மைக்கேல்பட்டி | காலை 9.00 |
| | தூய அலோசியஸ் து. பள்ளி | ” | |
| | இருதய மே. நி. பள்ளி | ” | |
| 09-11-2016 | ஆர் சி. வீரமாமுனிவர் ந. நி. பள்ளி | ஏலாக்குறிச்சி | காலை 9.00 |
| | ஆர்.சி துவக்கப் பள்ளி | மலத்தான்குளம் | காலை 10.00 |
| | புனித இஞ்ஞாசியார் துவக்கப் பள்ளி | கோக்குடி | காலை 11.30 |
| | புனித இஞ்ஞாசியார் உ. நி. பள்ளி | ” | மதியம் 2.00 |
| 10 - 11-2016 | புனித சவேரியார் ந. நி. பள்ளி | கல்லக்குடி | காலை 9.30 |
| | புனித மரியன்னை ந. நி. பள்ளி | வடுகர்பேட்டை | காலை 10.30 |
| | புனித லூயிஸ் ந. நி. பள்ளி | புள்ளம்பாடி | மாலை 2.00 |
| | புனித சிறியமலர் ந. நி. பள்ளி | வந்தலை | மாலை 3.00 |
| 11- 11- 2016 | புனித தோமினிக் பெ. மே. நி. பள்ளி | பெரம்பலூர் | காலை 9.30 |
| | ஆர்.சி.புனித சூசையப்பர் ந. நி. பள்ளி | பாளையம் | மதியம் 2.00 |
| 15-11-2016 | புனித வளனார் ந. நி. பள்ளி | தோளூர்பட்டி | காலை 9.30 |
| | புனித மரியன்னை து. பள்ளி | தொட்டியம் | காலை 9.30 |
| | புனித மரியன்னை உ. நி. பள்ளி | தொட்டியம் | காலை 10.30 |
| | புனித மரியன்னை து. பள்ளி | முசிறி | மதியம் 2.30 |
| | அமலா துவக்கப் பள்ளி | முசிறி | மதியம் 2.30 |
| 16 -11 - 2016 | அமலா பெ. மே. நி. பள்ளி | முசிறி | காலை 9.30 |
| | ஆர்.சி. துவக்க பள்ளி | கிருஷ்ணாபுரம் | மதியம் 2.30 |
| | ஆர்.சி. ந. நி. பள்ளி | பெருமாள்பாளையம் | மாலை 3.00 |
| 17-11-2016 | ஆர்.சி. புனித எட்வர்ட் து. பள்ளி | கோட்டப்பாளையம் | காலை 9.00 |
| | ஆர். சி. ந. நி. பள்ளி | கோட்டப்பாளையம் | காலை 10.30 |
| | புனித லூர்தன்னை பெ. மே. நி. பள்ளி | கோட்டப்பாளையம் | காலை 10.30 |
| | ஆர். சி. மேரி துவக்கப் பள்ளி | ஆர். புதுப்பட்டி | காலை 10.30 |
| 19-11-2016 | புனித வளனார் பெ. மே. நி. பள்ளி | வடுகர்பேட்டை | மதியம் 2.00 |
| 23-11-2016 | சிறியமலர் மே. நி. பள்ளி | குடந்தை | காலை 9.30 |
| | புனித வளனார் து. பள்ளி | குடந்தை | மதியம் 2.30 |

05, 06 - 11 - 2016 அன்று கும்பகோணம் மறைப்பணி மையத்தில் நடைபெற்ற ஆசிரியர் தியானத்தில் 183 பேர் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.
12, 13 - 11 - 2016 அன்று வடுகர்பேட்டையில் நடைபெற்ற ஆசிரியர் தியானத்தில் 152 பேர் கலந்து கொண்டார்கள்.

பள்ளி ஆய்வு மற்றும் ஆசிரியர் தியானம் சிறப்பாக நடைபெற உதவிய அருள்திரு. தாளாளர்களுக்கும், பங்குத் தந்தையர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், தலைமை ஆசிரிய, ஆசிரியைகளுக்கும், இருபால் ஆசிரிய பெருமக்கள் அனைவருக்கும் மறைக்கல்வி பணிக்குழு சார்பாக நன்றியும், வாழ்த்துக்களும், செபங்களும்.

அருள்பணி ச.இ.அருள்சாமி,
மறைக்கல்வி பணிக்குழுச் செயலர்.

## பெண்கள் பணிக்குழு

| நாள் | இடம் | கருத்தாளர்கள் | தலைப்பு | பங்கு பெற்றோர் |
|---|---|---|---|---|
| 23.10.16 | மிக்கேல்பட்டி | அருள்பணி.J.அந்தோணிஜோசப் VF<br>திருமதி. T.ராஜி,<br>திருமதி. G. சாந்தி<br>அருட்சகோ. G. பவுலின் FSAG | சுற்றுப்புறச் சூழலும்,<br>பெண்களும்<br>பெண் கல்வியின் சிறப்பு<br>பாலின சமத்துவம் | 58 |
| 13.11.16 | பூண்டி | அருள்பணி. A.பாக்கியசாமி, அதிபர்<br>அருள்பணி. S.ஜோசப் ஆரோக்கியராஜ்<br>திருமதி. T.ராஜி,<br>திருமதி. G. சாந்தி<br>அருட்சகோ. G. பவுலின் FSAG | திருச்சபையும், பெண்களும்<br>ஆண், பெண் சமத்துவம்<br>பெண் கல்வியின் சிறப்பு<br>இயக்கங்கள் | 52 |

பெண்களுக்கு, அடிப்படை உருவாக்கப்பயிற்சிப் பாசறை பயிற்சியளிக்க ஒத்துழைப்பு நல்கிய அருள்தந்தையர்கள் மற்றும் கருத்தாளர்கள் அனைவருக்கும் பெண்கள் பணிக்குழுவின் நன்றிகளும், செபங்களும்.

19-20/10/2016 இறை இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு பணிக்குழுச் செயலர்கள் இணைந்து வடுகர்பேட்டை, விரகாலூர் பங்குகள் மற்றும் கிளைப் பங்குகளுக்குச் சென்று, வீடுகள் சந்தித்து, சிறிய ஜெப பகிர்வு வைத்து, மக்கள் அனைவரும் பாவசங்கீர்த்தனம் செய்து, திருப்பலியில் பங்கு கொண்டு

நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்ள வழிகாட்டி வந்தோம். அனைவரும் மகிழ்வாகப் பங்கேற்றனர்.

01-05/11/2016 திண்டிவனம் அருள்ஒளி இல்லத்தில் அருட்சகோதரிகளுக்கான ஆற்றுப்படுத்துதல் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வந்தோம்.

08-11, 15-17 புள்ளம்பாடி, இலால்குடி, பெரம்பலூர், மிக்கேல்பட்டி மறைவட்டப் பள்ளிகளில் மறைக்கல்வி பணிக்குழுவோடு இணைந்து பள்ளி பிள்ளைகளை சந்தித்து, மறைக்கல்வி-நன்னெறி ஆண்டாய்வு செய்து, திறமைகளைப் பாராட்டி, வாழ்க்கைக்கு வழிகாட்டி, உற்சாகப்படுத்தி வந்தோம்.

இவண்,
அருட்சகோதரி G. பவுலின் மேரி FSAG,
பெண்கள் பணிக்குழுச் செயலர்.

## அருங்கொடைப் பணிக்குழுப் பணி அறிக்கை

19-10-2016 கும்பகோணம் மறைவட்ட குருக்களை தமிழக அருங்கொடை பணிக்குழுவின் செயலர் தந்தை சேவியர் அருள்ராஜ் அவர்களும், பணிக்குழுச் செயலர் தந்தை ஆல்பர்ட் புஷ்பராஜ் அவர்களும் சந்தித்தார்கள். பங்குகளில் அருங்கொடை செபக்குழுக்களை உருவாக்கிட பரிந்துரை செய்தார்கள். பாபநாசம் பங்கு இராஜகிரியில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை அருங்கொடை செபக்குழுவினர்களை தமிழ்நாடு மாநில அருங்கொடைச் செயலர் தந்தை சேவியர் அருள்ராஜ் அவர்கள் பார்வையிட்டார். செபக்குழு உறுப்பினர்கள் சிறப்பாக செயல்படுவது கண்டு பாராட்டினார். இறுதியில் பாபநாசம் பங்குத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி ஊக்கப்படுத்தினார்.

21-10-2016 கும்பகோணம் மறைமாவட்ட மேய்ப்புப்பணி இயக்குநர் தந்தை ச.இ.அருள்சாமி அவர்களும், தமிழக அருங்கொடைச் செயலர் தந்தை சேவியர் அருள்ராஜ் அவர்களும் பெரம்பலூர், இலால்குடி ஆகிய மறைவட்ட முதன்மை குருக்களை சந்தித்தார்கள். மறைவட்டங்களில் அருங்கொடை பணிகள், நற்செய்தி அறிவிப்பு பணிகள் சிறப்பாக செயல்பட உற்சாகப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். செபக்குழுக்கள், பங்கு தளங்களுக்கு உதவிட வேண்டும். தங்களை தனிமைப்படுத்திக்

கொள்ளக்கூடாது. செபக்குழுக்கள் பங்குகளோடு இணைந்தவை. செபக்குழுப் பணியாளர்கள் தங்களை மையப்படுத்தி செயல்படக்கூடாது என்ற கருத்துக்களை தமிழக அருங்கொடை பணிக்குழு செயலர் வலியுறுத்திக் கூறினார்.

23-10-2016 கும்பகோணம் மறைவட்டத்திற்கான மாதாந்திர உபவாச நற்செய்திக் கூட்டம் காலை 10 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெற்றது. காலை 10 மணி முதல் 11 மணி வரை தமிழக அருங்கொடைச் செயலர் தந்தை செய்தி வழங்கினார். காலை 11 மணி முதல் 3 .00 மணி வரை அருள்தந்தை. இராஜமாணிக்கம் - வரதராஜன்பேட்டை, சலேத்மாதா திருத்தலம், செய்தி மற்றும் குணமளிக்கும் நற்கருணை ஆராதனை வழிபாடு நடத்தினார். இறுதியில் பணிக்குழுச் செயலர் தந்தை ஆல்பர்ட் புஷ்பரராஜ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி அனைவருக்கும் நன்றி கூறினார்.

27-10-2016 நம்பர்-1, டோல்கேட் பங்கில் மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை செபவழிபாடும், திருப்பலியும் அருள்தந்தையர்கள் சேவியர் அருள்ராஜ், ஆல்பர்ட் புஷ்பராஜ் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

28-10-2016 புறத்தாக்குடி பங்கு மாணிக்கப்புரம் கிராமத்தில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை ஒப்புரவு அருட்சாதனமும், விவிலிய விளக்கமும் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டன. சமயபுரம் பங்கில் உள்ள CTC கன்னியர் இல்லத்தில் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நற்கருணை ஆராதனையும், செபவழிபாடும் அருட்தந்தை சேவியர் அருள்ராஜ் அவர்களால் நடத்தப்பட்டது.

30-10-2016 கும்பகோணம் பேராலயத்தில் காலை 8 மணி முதல் 9.30 மணி வரை நடைபெற்ற திருப்பலியில் தமிழக அருங்கொடை பணிக்குழுச் செயலர் தந்தை சேவியர் அருள்ராஜ் அவர்கள் மறையுரை நிகழ்த்தி அருங்கொடை செபப் பணிக்குழுவின் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார்கள்.

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை கும்பகோணம் மறைமாவட்ட அருங்கொடை பணிக்குழு ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை தமிழக அருங்கொடை பணிக்குழுச் செயலர் தந்தை சேவியர் அருள்ராஜ் அவர்கள்

| | |
|---|---|
| | வழிநடத்தினார். மறைமாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலிருந்தும் 75 பேர் கலந்து கொண்டார்கள். |
| 03-11-2016 | நடுவலூர் பங்கில் மாலை 6.30 மணி முதல் 8 மணி வரை நற்கருணை ஆராதனையும், செப வழிபாடும் பணிக்குழு வேதியர் ஜேக்கப் அவர்களால் வழிநடத்தப்பட்டது. |
| 04-11-2016 | கும்பகோணம் திருஇருதய மருத்துவமனையில் மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை நற்கருணை ஆராதனையும், செபவழிபாடும் பணிக்குழுச் செயலர் தந்தை ஆல்பர்ட் புஷ்பராஜ் அவர்களால் வழிநடத்தப்பட்டது. |
| 05-11-2016 | ஆண்டிமடம் பங்கில் மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை நற்கருணை ஆராதனையும், செபவழிபாடும் அருங்கொடை செபமும், திருப்பலியும் நடத்தப்பட்டன. |
| 06-11-2016 | குமிளங்குழி பங்கிலும் கிளைகிராமங்களிலும் அருங்கொடை பணிக்குழுவினர்களையும், மக்களையும் சந்தித்து செப வழிபாடு மற்றும் அருங்கொடை செப செயல்பாடுகள் நடக்க ஆலோசனை கூட்டம் நடந்தது. பங்குத்தந்தை ஜோசப் மைக்கேல்ராஜ் நன்றி கூறினார். |
| 08-11-11-2016 | ஆகிய நான்கு நாட்கள் பணிக்குழு வேதியர் ஜேக்கப் மறைக்கல்விப் பணிக்குழுவோடு இணைந்து மிக்கேல்பட்டி, ஏலாக்குறிச்சி, கோக்குடி, மலத்தாங்குளம், கல்லக்குடி, வடுகர்பேட்டை, புள்ளம்பாடி, வந்தலை, பெரம்பலூர், பாளையம் ஆகிய ஊர்களில் உள்ள கத்தோலிக்க பள்ளிகளில் மறைக்கல்வி - நன்னெறி பள்ளி ஆய்வு மேற்கொண்டார்கள். |
| 15 - 17-11-2016 | ஆகிய 3 நாட்கள் பணிக்குழு வேதியர் ஜேக்கப் மறைக்கல்வி பணிக்குழுவோடு இணைந்து தொட்டியம், தோளூர்பட்டி, முசிறி, பெருமாள்பாளையம், கிருஷ்ணாபுரம், கோட்டப்பாளையம் ஆகிய ஊர்களில் உள்ள கத்தோலிக்க பள்ளிகளில் மறைக்கல்வி - நன்னெறி பள்ளி ஆய்வு நடத்தினார். |

இவண்,

அருள்பணி M. ஆல்பர்ட் புஷ்பராஜ்,

செயலர், அருங்கொடை பணிக்குழு.

## திருவழிபாட்டுக் குழு

03.11.2016 — அன்று சிலுவைப்பட்டி பங்கில் இறைஇரக்க ஆண்டின் நினைவாக ஒப்புரவு அருட்சாதனம் வழங்க வீடுகள் சந்தித்து அவர்களுக்காக செபித்து ஆலயத்தில் பாவ சங்கீர்த்தனம் கேட்கப்பட்டது.

06 - 11.11.22016 — ஆகிய ஐந்து நாட்கள் பூண்டி மாதா வழிபாடு மற்றும் தியான மையத்தில் மறைமாவட்ட குருக்களின் வருடாந்திர தியானம் நடைபெற்றது. குருக்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். முதல் குழுவில் உள்ள குருக்கள் தியானத்தைச் சிறப்பாக செய்வதற்கு அனைத்துவிதமான ஏற்பாடுகளும், உதவிகளும் திருவழிபாட்டுக்குழு சார்பில் செய்யப்பட்டது.

13 - 18.11.2016 — ஆகிய ஐந்து நாட்கள் பூண்டி மாதா வழிபாடு மற்றும் தியான மையத்தில் மறைமாவட்ட குருக்களின் இரண்டாவது குழுவில் உள்ள குருக்கள் பங்கு கொண்டனர். இக்குழுவில் உள்ள குருக்கள் தங்கள் வருடாந்திர தியானத்தை சிறப்பாக செய்வதற்கு அனைத்து முன்னேற்பாடுகளும் உதவிகளும் திருவழிபாட்டுக்குழு சார்பில் செய்யப்பட்டது.

27.11.2016 — குலமாணிக்கம் பங்கில் இயேசுவின் கண்மணிகள் இயக்கம் ஆரம்பிப்பதற்கான குழந்தைகள் சந்திப்பும், தயாரிப்பும், அவர்களுக்கான திருப்பலியும் நிறைவேற்றப்பட்டன.

இவண்,
அருள்பணி A. சிரில் ரிச்சர்ட் கிருபாகரன்,
செயலர், திருவழிபாட்டுக்குழு.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடல், நற்செய்தி அறிவிப்பு பணிக்குழுக்கள்

2016, நவம்பர் 24 ஆம் நாள் தமிழக அளவில் கிறிஸ்துவ ஒன்றிப்பு பல்சமய உரையாடல் பணிக்குழுக்களின் கூட்டம் தர்மபுரியில் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. தமிழகத்தின் 10 மறைமாவட்ட பணிக்குழு செயலர்கள் பங்கு பெற்றனர். கிறிஸ்துவ ஒன்றிப்பைப்பற்றி, மாத்யூ, தென்னிந்திய திருச்சபை பாஸ்டர், சென்னை அவர்கள் கருத்துரை வழங்கினார். கத்தோலிக்க சபையல்லாத

பிற சபைகளிலும் கிறிஸ்துவ ஒன்றிப்பு இயக்கம் உள்ளது என்றும், வழிபாடு, சமூக பணிதளங்கள், கிறிஸ்துவ உரிமைகளுக்கான போராட்டங்கள் ஆகியவைகளில் ஒன்றிணைந்து செயல்படலாம் என்று விளக்கினார். பெந்தகோஸ்தே சபையினர் தனித்தும் கட்டுப்பாடில்லாமலும் செயல்படுகின்றனர். அவர்களுடன் கவனமுடன் உறவாட வேண்டும். ஆனால் பெந்தகோஸ்தே சபையினர், நற்செய்தி அறிவிப்புப் பணிகளில் மக்களிடையே உட்புகுந்து செயல்படுவது பாராட்டத் தக்கது என்றார். பிற சபைகளைச்சேர்ந்த சகோதர்களுடன் ஒன்றிணைந்து செபிப்பது நடைமுறைக்கு ஏற்றதும் பயனுள்ளதும் என்றார்.

பல்சமய உரையாடல் பற்றி சென்னையை சேர்ந்த திரு. குழந்தை சாமி அவர்கள் கருத்துரை வழங்கினார். அவர் 'காந்திய அமைதி அமைப்பை' நடத்தி வருபவர். பல் சமயத்தை சேர்ந்தவர்கள் கூட்டு பிரார்த்தனை செய்தல் மிகபயனுள்ளவை எனவும், இதனைத்தான் 'காந்திய அமைதி அமைப்பு' செயல்படுத்துகிறது என்றார். பிரார்த்தனை கூட்டம் நடத்தும் முறையையும் விளக்கினார். ஒரு மணி நேரம் மட்டும் இப்பிரார்த்தனை நடைபெறும். ஒவ்வொரு சமயத்திலிருந்து வரும் பிரதிநிதி ஒருவர் மேடையில் இடம் பெறுவார். ஒவ்வொருவரும் ஏதாவது அவரது சமய பாடல் அல்லது அவர்களின் சமய நூலிலிருந்து வாசிப்பார். ஒவ்வொருவருக்கும் ஏழு நிமிடங்கள் மட்டும்தான். இறுதியில் அமைதியைப் பற்றி பாரதியார் போன்ற பொதுவானவர்களின் பாடல் பாடப்படும். இறுதியில் யாராவது தேநீர் வழங்கினால் அத்துடன் பிரார்த்தனை நிறைவு பெறும். எவ்வித சொற்பொழிவும் இடம்பெறுவதில்லை என்றார். கிறிஸ்துவ ஒன்றிப்பு, பல்சமய உரையாடல்களில் நாமும் பங்குபெற்று பயனடைவோம்.

இவண்,
அருள்பணி ச.இ. அருள்சாமி,
மறைக்கல்வி பணிக்குழுச் செயலர்.

## அன்பிய, விவிலியப் பணிக்குழு

| | |
|---|---|
| 19.10.2016 | இறை இரக்கத்தின் ஆண்டை சிறப்பாக தயாரிக்க வடுகர்பேட்டை பங்கில் ஒப்புரவு அருள்சாதனமும் சிறப்பு திருப்பலியும் நிகழ்த்தப்பெற்றன. |
| 20.10.2016 | விரகாலூர் பங்கில் வீடுகள் சந்திக்கப்பட்டு சிறப்பு திருப்பலியும், ஒப்புரவு அருள்சாதனமும் நடைபெற்றது. |
| 21-23.10.2016 | மூன்று நாள்கள் இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை முன்னிட்டு "இறைவார்த்தை ஒளியில் இறை இரக்கத்தின் |

| | |
|---|---|
| | தூதர்களாய்" என்ற தலைப்பில் வேளாங்கண்ணியில் தமிழக அளவில் மூன்று நாள்கள் கருத்தமர்வு நடைபெற்றது. நமது மறைமாவட்டத்திலிருந்து 15 நபர்கள் கலந்து கொண்டார்கள். |
| 25-28.10.2016 | திருவாலந்துறை பங்கில் அன்பிய செயலர் தந்தை தலைமையில் பணிக்குழுவினர் வீடுகளைச் சந்தித்து, அன்பியங்கள் ஆரம்பிக்கப்பட்டன. |
| 29.10.2016 | பாத்திமாபுரம் பங்கில் அன்பிய செயலர் தந்தை மற்றும் திருவாலந்துறை பங்குத் தந்தை M. ஜோசப் ஆகியோர் இணைந்து வீடுகள் சந்தித்து விவிலியம், அன்பியம் பற்றி விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. |
| 30.10.2016 | மறைமாவட்ட அளவில் விவிலிய வினாடி வினா போட்டி தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு ஆறு மறைவட்ட மையங்களில் நடைபெற்றது. இதில் 167 பேர் பங்கு கொண்டனர். |
| 30.10.2016 | புள்ளம்பாடி, இலால்குடி, பெரம்பலூர் மறைவட்டங்களைச் சார்ந்த அன்பிய ஒருங்கிணைப்பாளர்களுக்கு சிறப்புக் கூட்டம் இலால்குடியில் நடைபெற்றது. இதில் 68 பேர் கலந்து கொண்டனர். |
| 03.11.2016 | விவிலிய பணிக்குழு அலுவலகம் புதுப்பிக்கப்பட்டு, நமது மறைமாவட்ட ஆயர் அவர்களால் புனிதப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் அன்பிய பொறுப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. |
| 13.11.2016 | மறைமாவட்ட அளவில் அன்பிய ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் கும்பகோணத்தில் நடைபெற்றது. |
| 21 - 25.11.2016 | கோவாவில் இந்திய அளவில் நடைபெற்ற விவிலிய கருத்தரங்கில் விவிலிய பணிக்குழுச் செயலர் தந்தை அருள்பணி B. ஜான்போஸ்கோ கலந்து கொண்டார். |

**இவண்,**

அருள்பணி B. ஜான் போஸ்கோ,
அன்பிய, விவிலியப் பணிக்குழுச் செயலர்.
அலைப்பேசி : 8489948811

## தலித் நலப் பணிக்குழு அறிக்கை

அன்புள்ள அருள்பணியாளர்களே! அருட்சகோதரிகளே!

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழுவின் வாழ்த்துக்களும், செபங்களும். நமது மறைமாவட்டத்தில் மேதகு ஆயர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வருகின்ற டிசம்பர் 11–ஆம் தேதி திருவருகைக்காலத்தின் 3–வது ஞாயிற்றுக்கிழமையில் தலித் விடுதலை ஞாயிறை சிறப்பிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தலித் விடுதலை ஞாயிறுக்கான திருவழிபாட்டுக் குறிப்புகளும், சுவரொட்டிகளும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**தலித் விடுதலை ஞாயிறின் நோக்கம்** :

தலித் கிறிஸ்தவர்கள் பன்னெடுங்காலமாக பல்வேறு அடக்கு முறைகளுக்கும், வன்முறைகளுக்கும் பலியாகி உள்ளனர். அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் பின்தங்கியுள்ளனர்.

இந்த பின்தங்கிய மக்களின் வாழ்வு மேம்பட எல்லா கிறிஸ்தவர்களும் இணைந்து செபிக்க வேண்டும் என இந்திய ஆயர்ப் பேரவையும், தமிழக ஆயர்ப் பேரவையும் எல்லா இறைமக்களுக்கும் வேண்டுகோள் விடுவிக்கின்றனர். எனவே நமது மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து பங்குகளிலும் சிறப்பாக திருப்பலி நிறைவேற்றி மக்கள் அனைவரும் தலித் கிறிஸ்துவர்களின் வாழ்வு முன்னேற்றம் காண இணைந்து செபிப்போம்.

13 - 11 - 2016 பெரம்பலூர் மறைவட்ட பொதுக்குழு உருவாக்கப்பட்டது. இதில் 22 பேர் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் தலைவர், செயலர், இளையோர் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

18 - 11 - 2016 திருச்சி உதயதீபத்தில் நடைபெற்ற செயலர்கள் கூட்டத்தில் அருள்பணி. அ. குழந்தைநாதன் கலந்து கொண்டார்.

20 - 11 - 2016 புதூர் - உத்தமனூர் பங்கில் தலித் கிறிஸ்தவ மக்களை சந்தித்து தலித் மக்கள் மன்றம் உருவாவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

23 - 11 - 2016 இலால்குடி மறைவட்ட பொதுக்குழு உருவாக்கப்பட்டது. இதில் 25 பேர் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் தலைவர், செயலர், இளையோர் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இப்படிக்கு,
அருள்பணி. அ. குழந்தைநாதன்,
பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழுச் செயலர்.

# BISHOP'S FUND FOR EDUCATION
# MONTH OF NOVEMBER – 2016

| S. No. | Particulars | Parishes | Amount |
|---|---|---|---|
| 1. | Mrs. Cecilia | Singapore USD 1000 | 48,138 |
| 2. | Mrs. Theresa | Singapore USD 250 | 12,138 |
| 3. | Rev. Fr. Gnani | Germany Euro 715 | 52,196 |
| 4. | Sikkathampur | Perumalpalayam | 1,000 |
| | | Total | **1,13,472** |

**BALANCE SHEET**

| S. No. | Particulars | Payments | Receipts |
|---|---|---|---|
| 1 | Balance on 30.10.2016 | | 3,03,078.00 |
| 2 | Month of Nov. - 2016 | | 1,13,472.00 |
| | Total | | 4,16,550.00 |
| 3 | Fixed Deposit | 2,00,000.00 | |
| | Balance | | 2,16,550.00 |

E.&.O.E.

Rev. Fr. M. Philip Santiagu,
Procurator.

# KUMBAKONAM DIOCESE NEWS LETTER

## IMPORTANT EVENTS


Annual Retreat : Batch - 1, Poondi.


Final Profession : SMMI Sisters, Poondi.


Annual Retreat : Batch - 2, Poondi.


Blessing of the Home for the Aged, No. 1 Tolgate.

Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.

Udaya Offset Printers - Kmu. Cell : 94436 51112